

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 306 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 02 – ஞாயிற்றுக்கிழமை 16 ஜுன் 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 306 : Thiruvalluvar Year - 2055 - Aani 02- Sunday 16 June 2024 - Dak 8 Pages ₹ 5.00


## மக்கள் வெள்ளத்தில் மாநகர்! முதல்வருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு!

# கோவையில் மாபெரும் முப்பெரும் விழா!

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் – கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சிறப்புரையாற்றினர்!

**கோவை, ஜூன் 16-**

**மக்கள் வெள்ளத்தில் மாநகர் கோவையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் முப்பெரும் விழாவில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களும், வெற்றி வாகை சூடிய நாற்பது எம்.பி.களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.**

**இவ்விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக கூட்டணியின் வெற்றிக்குக் காரணமான வாக்காளர்களுக்கு நன்றி கூறி சிறப்புரையாற்றினார்.**

நடந்து முடிந்துள்ள 2024ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40க்கு 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. அமைச்சர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தி.மு.க. எம்.பி.க்கள் முடிவு!**

இதனைத் தொடர்ந்து 40க்கு 40 தொகுதிகளை வெல்வதற்கு



காரணமாக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதோடு சேர்த்து கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழா மற்றும் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா என முப்பெரும் விழாவை கோவையில் நடத்த தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் திட்டமிடப்பட்டது.

**கழகத்தினருக்கு முதல்வர் அழைப்பு!**

இதுகுறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘உங்களில் ஒருவன்’ மடலில் கழகத் தோழர்களுக்கு அழைப்பு விடுத்து எழுதியுள்ள கடிதத்தில்,

“இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமான விழாவோ; அதன் தோழமைக் கட்சிகளுக்கான விழாவோ மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் விழா! அவர்கள் நமக்கு வழங்கியுள்ள மகத்தான வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் விழா! மதவாத அரசியலுக்குக் கடிவாளம் போட்டு - ஜனநாயகத்தையும் அரசியலமைப் புச்சட்டத்தையும் பாதுகாத்து, நாட்டை வழிநடத்தும் வகையில் நாற்பதுக்கு நாற்பதை நமக்கு வழங்கியிருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

மூன்றாண்டுகால திராவிட மாடல் அரசின் திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் நேரடிப் பயன்களைத் தந்திருப்பதால் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நாம் இருக்கிறோம். அந்த நம்பிக்கை மேலும் வலுப்பெறும் வகையில் திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் தொடரும். அவை சரியான முறையில் மக்களிடம் சென்று சேர்வதையும் அதன் நீண்டகாலப் பயன்களையும் எடுத்துரைக்கக்கூடியவர்களாக உடன்பிறப்புகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும்.

நாற்பதுக்கு நாற்பது என்று நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது போல, 2026 சட்டமன்றத் தேர்தலில் 200+ தொகுதிகளில் வெற்றியினை உறுதி செய்திட ஜூன் 15 கோவை முப்பெரும் விழா நமக்கு ஊக்கமளிக்கும் இடமாக அமையட்டும்! காணப் போகும் களங்கள் அனைத்திலும் கழகம் வெல்லட்டும்!! கோவை குலுங்கிட கொள்கைத் தீரர்களே திரண்டிடுக!!!” என்று குறிப்பிட்டிருந்தார்.

**கழகத் தலைவர் - முதல்வர் உரையாற்றினார்!**

அதன்படி நேற்று கோவை பீளமேடு கொடிசியா மைதானத்தில் மாலை 4 மணிக்கு முப்பெரும் விழா தொடங்கியது.

இந்த விழாவில், தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.

**கூட்டணிக் கட்சித் தலைவர்கள் - 40 எம்.பி.க்கள் பங்கேற்பு!**

மேலும் கூட்டணிக் கட்சித் தலைவர்களான - தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் முத்தரசன், மார்க்ஸ்சிட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்ற 40 எம்.பி.க்கள் பங்கேற்றனர்.

**முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!**

இந்த நிலையில் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பங்கேற்க தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் கோயம்புத்தூர் வந்தடைந்தார்.

மக்கள் வெள்ளத்தில் மிதந்த கோவை மாநகரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள், தி.மு.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

---

### குத்தகையை முறையாகச் செலுத்தாததால் – திருச்சி

## எஸ்.ஆர்.எம். ஹோட்டல் மீது நடவடிக்கை!

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தகவல்!

சென்னை, ஜூன் 16 -

“குத்தகையை முறையாகச் செலுத்தாததால் திருச்சியிலுள்ள எஸ்.ஆர்.எம். ஹோட்டல் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

திருச்சி மாவட்டம், கொட்டப்பட்டு கிராமத்தில் 4.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான பலகோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் எஸ்.ஆர்.எம். ஓட்டல் நிறுவனத்திற்கு, கடந்த 1994ஆம் ஆண்டில் 30 வருட காலத்திற்கு குத்தகை விடப்பட்டது. மேற்படி இடம் குத்தகைதாரருக்கு 14.6.1994 அன்று ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் எஸ்.ஆர்.எம். ஓட்டல் நிறுவனம் ஆகிய இரு தரப்பினரும் சம்மதித்து கையெழுத்திடப்பட்ட இந்த குத்தகை ஒப்பந்தமானது கடந்த 13. 6.2024 அன்றுடன் முடிவடைந்து விட்டது.

1994ஆம் ஆண்டு குத்தகை வழங்கப்பட்ட அரசாணையின்படி, மேற்படி நிலத்திற்குச் சந்தை விலையின் அடிப்படையில், 7 சதவீதம் வருடாந்திர குத்தகைத் தொகை கணக்கிட்டு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைத் தொகை ரூ.47,93,85,941/ என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இதில், நாளது தேதி வரை குத்தகைதாரர் எஸ்.ஆர்.எம். ஓட்டல் நிறுவனம் செலுத்திய தொகை ரூ.9,08,20,104/ மட்டுமே. மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.38,85,65,837/ஐ குத்தகைதாரர் இதுவரை செலுத்தவே இல்லை.

இவ்வாறு பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தில் 30 ஆண்டுகளாக முழுமையான குத்தகை தொகையைச் செலுத்தாமல் எஸ்.ஆர்.எம். நிறுவனம் தனது ஹோட்டலை தொடர்ந்து நடத்தி வந்துள்ளது.

குத்தகை ஒப்பந்தத்தில், மேற்படி நிலமானது 14.6.1994 முதல் 13.6.2024 வரையிலான 30 வருட காலத்திற்கு மட்டும் தான் குத்தகைக்கு விடப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணத்தை முன்னிட்டும் குத்தகைக் காலத்தை மேலும் நீட்டிக்க ஒப்பந்தக்காரர் கோரக் கூடாது என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குத்தகை முடியும் நாளில் குத்தகைதாரரால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு எவ்வித நிபந்தனையுமின்றி நிலம் மற்றும் கட்டடங்களை எவ்வித சேதாரமுமின்றி ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒப்பந்தத்தின் சாராம்சத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஊடகங்களில் தவறான தகவல்!**

மேலும் நிலுவைத் தொகையை செலுத்த 02.05.2024 நாளன்று (ஒரு மாத காலத்திற்கு முன்பாக) குத்தகைதாரருக்கு எழுத்துப்பூர்வமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது மட்டுமல்லாமல், குத்தகைக் காலம் 13.06.2024 அன்றுடன் முடிவடைகிறது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்ததாரரால் நாளது தேதி வரை நிலுவைத் தொகை ரூ.38,85,65,837/ செலுத்தப்படாமல் இன்னும் நிலுவையாகவே உள்ளது. உண்மை நிலை இவ்வாறு இருக்க, சில ஊடகங்களில் எஸ்.ஆர்.எம். ஹோட்டல் சார்பாக தவறான மற்றும் உண்மைக்கு மாறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், குத்தகைக் காலம் முடிவடைந்ததாலும், குத்தகைதாரர் முறையாக, முழுமையான குத்தகைத் தொகையைச் செலுத்தாததாலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அரசாணை மற்றும் ஒப்பந்தத்தின்படிதான் முறையான நடவடிக்கையை எடுத்துள்ளது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

### ‘நீட்’ ஊழல் நாடு முழுவதும் வலுக்கும் போராட்டம்! பீகாரில் மாணவர்கள் போராட்டம்!

பாட்னா, ஜூன் 16 -

பீகார் தலைநகர் பாட்னாவில் ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்வேறு குளறுபடிகளுடன் நடந்த ‘நீட்’ நுழைவுத் தேர்வை ஏற்க முடியாது எனக் கூறி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

இதேபோல், உத்தரப் பிரதேசத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில், ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தப்பட்டது.

‘நீட்’ தேர்வு முடிவுகள் தங்கள் மாநில மாணவர்களுக்கு அநீதியாக அமைந்துள்ளதாகவும், இதனால், ‘நீட்’ தேர்வை உடனே ரத்து செய்ய வேண்டும் என்றும் மகாராஷ்ட்ரா அரசும் வலியுறுத்தியுள்ளது.

‘நீட்’ முறைகேடுகளால் நாடு முழுவதும் போராட்டம் வலுக்கிறது.

---

## ‘நீட்’ கேள்வித்தாள் கசிவை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள்!

### பீகார் கூடுதல் டி.ஜி.பி. தகவல்!

பாட்னா, ஜூன் 16 -

மே 5 ஆம் தேதி நீட் தேர்வு நடைபெற்ற போது பல மையங்களில் மோசடி நடைபெறுவதாக பீகார் மாநில போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து பாட்னா போலீசார் விசாரணை நடத்தியதில் இது வரை 4 மாணவர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வுக்கு முன்னதாக குறிப்பிட்ட ஒரு தேர்வு மையத்தில் 35 மாணவர்கள் ஒன்று கூடி உள்ளனர். அவர்களுக்கு ஒரு கும்பல் உதவியுள்ளதும், பின்னர் எரிந்த நிலையில் சில கேள்வித்தாள்களை போலீசார் கைப்பற்றினர்.

இதையடுத்து, நடைபெற்ற தொடர் விசாரணையில் பெரும் பணம் கைமாறிய ஆவணங்கள், காசோலைகள் கைப்பற்றப்பட்டன.

பீகார் ஆசிரியர் தேர்வு முறைகேட்டில் தொடர்புடைய ஒரு நபரும் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த வழக்கை தற்போது பீகார் மாநில பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

இது குறித்து பேசிய கூடுதல் டி.ஜி.பி. கான்,

தேசிய தேர்வு முகமையிடமிருந்து கேள்வித்தாள் உள்ளிட்ட ஆவணங்கள் கேட்கப்பட்டது. கேள்வித் தாள் இப்போதுதான் கிடைத்துள்ளது. அதனை கைப்பற்றப்பட்ட கேள்வித்தாளுடன் ஒப்பீடு செய்ததாகவும், தொடர் விசாரணைகளுக்கு மேலும் சில தகவல்களை தேசிய தேர்வு முகமையிடம் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை நடத்திய விசாரணையில் நீட் கேள்வித்தாள் கசிந்துள்ளதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

தற்போது இந்த கேள்வித்தாள் யாரிடமிருந்து கிடைத்தது? எப்படி இந்த தேர்வு மையங்களை வந்தடைந்தது? என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை சேகரித்து வருகிறோம் என்று டி.ஜி.பி. கான் கூறியுள்ளார்.

இந்த மோசடியில் மாநிலங்களுக்கு இடையே செயல்படும் நீட் மோசடி கும்பல் இருப்பது தெரியவந்துள்ளது.

நீட் கேள்வித்தாள் கசியவில்லை என்று தேசிய தேர்வு முகமையும், ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறி வரும் நிலையில் இது வரை பதிவான வழக்குகளில் முறையான விசாரணைகள் தொடர வேண்டும் என்று மாணவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.